

# இந்து சமய அறநிலையத்துறை
# அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்,
# மேல்மலையனூர் (ம) வட்டம், விழுப்புரம் மாவட்டம்

## பிரசாதங்கள் விற்பனை செய்யும் உரிமம் மறுஏலம்/டெண்டர் அறிவிப்பு

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் (ம) வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயி– ல் பச– 1432–க்கு (06.08.2022 முதல் 30.06.2023 முடிய) உள்ள காலங்களுக்கு மட்டும் பிரசாதங்கள் விற்பனை செய்யும் உரிமம் **மறு**ஏலம்/டெண்டர் எதிர்வரும் 22.07.2022 பகல் 2.00 மணிக்கு இந்து சமய அறநிலையத்துறை, உயர் அலுவலர்கள் முன்னிலையில் பகிரங்க **மறு** ஏலம்/டெண்டர் விடப்படும். ஏலம்/டெண்டர் அளிப்பவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் பொது ஏலம்/டெண்டரில் கலந்து கொள்ளலாம்.

## மறு ஏலம்/டெண்டர் நிபந்தனைகள்

1) ஏலம்/டெண்டர் கலந்துகொள்பவர்கள் ரூ.1,00,000/– டெபாசிட் தொகையை வங்கி வரைவோலையாக செலுத்தி ஏலம்/டெண்டரில் கலந்து கொள்ளலாம்.

2) டெண்டர் அளிப்பவர்கள் திருக்கோயில் மூலம் வழங்கப்படும் டெண்டர் ஷெட்யூல் பாரத்தினை ரூ.100/– செலுத்தி பெற்றும் அல்லது www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்தில் இலவச பதிவிறக்கம் செய்தும், டெண்டர் தொகையை பூர்த்தி செய்து ரூ.1,00,000/– க்கான வங்கி வரைவோலையை டெண்டருடன் இணைத்து மூடி, முத்திரையிட்டு அதற்கென வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் 22.07.2022 அன்று பகல் 12.00 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ டெண்டர் அளிக்கலாம்.

3) ஏலம்/டெண்டர் அளிப்பவர்கள் ஆரம்ப கேள்வி தொகை ரூ.10,00,000/–க்கு மேல் அளிக்க வேண்டும்.

4) ஏலம்/டெண்டர் எடுப்பவர்கள் திருக்கோயிலின் மேற்கு வாயிலில் மட்டுமே கடை வைக்க வேண்டும். திருக்கோயிலின் உள்பிரகாரம், உள்பகுதியில் கடை வைக்க கூடாது.

4) டெண்டர் அளிப்பவர்கள் ஷெட்யூல் பாரத்தில் தாம் அளிக்கும் டெண்டர் தொகையினை அடித்தல், திருத்தல் இன்றி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

5) ஏலம் முடிந்தவுடன் ஏலத்தொகை முழுவதையும் அன்றே செலுத்த வேண்டும். தவறின் முன் உயர்ந்த கேள்விதாரருக்கு ஏலம் முடிவு செய்யப்படும். ஆனால் இதனை வ– யுறுத்த யாருக்கும் உரிமையில்லை.

6) திருக்கோயிலுக்கு பாக்கி உள்ளவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். பாக்கிதாரரின் பினாமி என தெரிய வந்தால் ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதியில்லை.

7) பொதுவாக உயர்ந்த கேள்விதாரருக்கு ஏலம்/டெண்டர் முடிவு செய்யப்படும். ஆனால் இதனை வ– யுறுத்த யாருக்கும் உரிமையில்லை.

8) ஏலம்/டெண்டர் ஒப்புதல் இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

9) பிரசாதம் தயாரிக்கும் இடம், விற்பனை செய்யும் இடம் ஆகியவற்றை சுத்தமாக பராமரிக்க வேண்டும். இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

10) பிரசாதங்கள் நல்ல தரமானவையாகவும், எடை குறையாமலும் இருக்க வேண்டும்.

11) பிரசாதங்கள் சுகாதார முறைப்படி சொந்தப்பொறுப்பிலும், செலவிலும் ஆட்களை வைத்து தயாரித்து, அம்மனுக்கு நிவேதனம் செய்த பின்னர் விற்பனை செய்ய வேண்டும்.

12) திருக்கோயில் நிர்வாகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட இடத்தில் மட்டுமே பிரசாதங்கள் விற்பனை செய்ய வேண்டும். சேரும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

13) குத்தகையை வேறு நபருக்கு மாற்றவோ, உள்குத்தகைக்கு விடவோ கூடாது.

14) விற்பனை செய்யுமிடத்தில் ஏதேனும் சில்லரை மராமத்து செய்ய வேண்டியிருந்தால் திருக்கோயில் அனுமதி பெற்ற பின்னரே இடத்தில் தமது சொந்த செலவில் செய்ய வேண்டும்.

15) பிரசாதங்கள் நல்ல தேர்ச்சி பெற்ற அனுபவமுள்ள சைவ பிராமணர்கள் கொண்டு தயார் செய்ய வேண்டும். மேலும் விற்பனை செய்யப்படும் பிரசாதங்கள் அனைத்திலும் தயார் செய்யும் தேதி, மற்றும் காலாவதி தேதி குறிப்பிடப்பட வேண்டும்.

16) பிரசாதங்கள், பட்சணங்கள் இதில் எந்தெந்த பட்சணங்கள் நெய் மற்றும் டால்டாவினால் தயாரிக்கிறார்கள் என்பதை பட்டியல் தயார் செய்து உதவிஆணையர்/செயல்அலுவலரிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெறவேண்டும். விளம்பர பலகையில் எடை விபரம், விலை ஆகியவற்றை தெளிவாக எழுதி வைக்க வேண்டும்.

17) அன்றாடம் தயாரிக்கும் பிரசாதங்கள் திருக்கோயில் நடைமுறை, பழக்க, வழக்கத்திற்குட்பட்டு முரணாகாதபடி நிவேதனம் செய்து அவசியமான பட்டுவாடா செய்வதற்கு ஒவ்வொரு இனத்திலும் மூன்று எண்ணிக்கை திருக்கோயிலுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

18) கெட்டுப்போன பிரசாதங்களை விற்பனை செய்யக்கூடாது.

19) 30.06.2023 அன்று திருக்கோயில் வசம் கடையை ஒப்படைத்து விட வேண்டும்.
20) ஏல நிபந்தனைகளை தளர்த்தவும், சேர்க்கவும் திருக்கோயில் அதிகாரிகளுக்கு பூரண உரிமையுண்டு.

21) ஏலம் கேட்பவர்கள் நிபந்தனைகளை நன்கு படித்து, தெரிந்துகொண்டதாகவும், தயாரிக்கும் இடம், விற்பனை செய்யுமிடம் ஆகியவற்றை நன்கு பார்வையிட்டு பின்னரே ஏலம் கேட்க வேண்டும். ஏலம் முடிந்த பின் கூறப்படும் எந்த புகாரும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

22) பிரசாதம் தயாரிக்குமிடம், விற்பனை செய்யுமிடம் ஆகியவற்றை திருக்கோயில் உதவிஆணையர்/செயல்அலுவலர் அல்லது அவரது ஆட்கள் எப்போதும் பிரவேசித்து கண்காணிக்க உரிமையுண்டு.

23) முத— ல் ஏலம் விடப்பட்டு பின்னர், வரப்பெற்ற டெண்டர்கள் திறக்கப்படும். இதில் எது கூடுதல் தொகையோ அது முடிவு செய்யப்படும். ஏலம் கேட்பவர் டெண்டர் திறந்த பின்னர் ஏலம் கேட்க அனுமதியில்லை. டெண்டர் பங்கு பெற்றவர்கள் ஏலத்திலும் கலந்துகொள்ளலாம்.

24) ஏலம் என்று குறிப்பிட்ட நிபந்தனைகள் டெண்டருக்கும் பொருந்தும்.
25) கீழ்கண்ட பிரசாதங்கள் மட்டுமே அதன் எதிரே குறிப்பிட்ட எடைக்கும், விலைக்கும் விற்பனை செய்ய வேண்டும்.

| வ. எண். | பிரசாதங்கள் பெயர் | எடை | விலை ரூ.பை. |
|---|---|---|---|
| 1) | லட்டு | 50 கிராம் | 10—00 |
| 2) | தேன் குழல் | 50 கிராம் | 10—00 |
| 3) | அதிரசம் | 50 கிராம் | 10—00 |
| 4) | மிளகு வடை | 50 கிராம் | 10—00 |
| 5) | பஞ்சாமிர்தம் | 500 கிராம் | 35—00 |
| 6) | சர்க்கரை பொங்கல் | 100 கிராம் | 10—00 |
| 7) | புளியோதரை | 100 கிராம் | 10—00 |
| 8) | வெண்பொங்கல் | 100 கிராம் | 10—00 |
| 9) | தயிர்சாதம் | 100 கிராம் | 10—00 |
| 10) | பிரசாத செட் 1<br>(லட்டு – 1, தேன்குழல்– 1, அதிரசம் – 1,<br>50 கிராம் கற்கண்டு பாக்கெட் —1<br>100 கிராம் பேரிச்சம்பழம் பாக்கெட் —1) | செட் 1—க்கு | 50—00 |

**26)** குத்தகை நிபந்தனைகள் எப்போதாவது மீறப்பட்டதாக தெரியவந்தால் குத்தகை உடனே ரத்து செய்யப்படும்.

**27)** ஏலம்/டெண்டரில் கலந்து கொள்பவர்கள் காப்புத்தொகையாக ரூ.10,000/– செலுத்த வேண்டும். அத்தொகை குத்தகை முடிவுறும் தேதியில் வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

**28)** இத்திருக்கோயில் வளாகத்தில் சுகாதார நலன் கருதி பிளாஸ்டிக் பைகள் தடை செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தக் கூடாது.

**29)** பிரசாதம் தயார் செய்த தேதி, எந்த தேதிக்கு முன்னர் பிரசாதங்களை பயன்படுத்த வேண்டும் . (Expiry Date) என்ற விபரம் குறிப்பிடப்பட வேண்டும்.

**31)** இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப பிரசாதங்கள் தயாரிக்க உணவு பாதுகாப்பு சான்று டெண்டர்தாரர் பெயரில் எடுக்க வேண்டும். அதன் விபரத்தினை திருக்கோயில் நிர்வாகத்திடம் தெரிவிக்க வேண்டும்.

**32)** டெண்டர்தாரர் பிரசாதம் தயாரிக்குமிடத்தில் எரிவாயு இணைப்புகள் (ம) மின் சாதனங்களையும் மாதம் ஒருமுறை ஆய்வு செய்து, அதன் விபரத்தினை திருக்கோயில் நிர்வாகத்திடம் தெரிவிக்க வேண்டும்.

**32)** இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

-----

திரு. ரா.மு. வடிவேல் பூசாரி,
அறங்காவலர் குழுத்தலைவர்

திரு.சு. செந்தில் குமார் பூசாரி, அறங்காவலர்

திரு.அ. தேவராஜ் பூசாரி, அறங்காவலர்

திரு. ர. ராமலிங்கம் பூசாரி, அறங்காவலர்

திரு.சி. செல்வம் பூசாரி, அறங்காவலர்

திரு.ம. சரவணன் பூசாரி, அறங்காவலர்

திரு.வ. சந்தானம் பூசாரி, அறங்காவலர்

திரு. இ. ஜீவானந்தம், எம்.எஸ்ஸி.,பி.எல்.,
உதவிஆணையர்/செயல்அலுவலர்